International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

# அகநானூற்றில் இயற்கைக் காட்சி

**ர.ஹேமாவதி**

*உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை*
*ஸ்ரீமத் ஆண்டவன் கலைமற்றும் அறிவியல் கல்லூரி*
*திருவானைக்காவல்*

## முன்னுரை

இலக்கியங்கள் மனிதனின் வாழ்க்கையை நெறிபடுத்தி வாழ்வதற்கான கட்டமைப்புகளை உண்டாக்குகின்றன. மனித வாழ்விற்கு அடிப்படைத் தேவைகளான, இயற்கையின் அமைப்பு இயல்புகளை இலக்கியங்கள் பிரதிபலிக்கின்றன. அத்தகைய இயற்கையினை நிலம் என்னும் பாகுபாட்டில் நம் முன்னோர்கள் வகைப்படுத்தி உள்ளனர். நிலத்தினை திணை என்ற கோட்பாட்டில் பகுத்து வகுத்துள்ளனர் அவ்விலக்கியங்களை மேல் கணக்கு என்றும் கீழ் கணக்கு என்றும் வரையறுத்து உள்ளனர். மேல் கணக்கு நூல்களில் ஒன்றான அகநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள இயற்கை அழகினை இக்கட்டுரையின் வழி ஆராய முற்படுகிறது.

**மலைத் தொடரின் அலகு:**

மலைகள் என்றால் மனிதனுக்கு மிகவும் பிடிக்கும். மனிதன் மலை தொடரினை பார்த்தால் அவனுடைய கண்கள் அம்மலை தொடரை விட்டு அகலாத அளவிற்கு. இயற்கை எழில் மிளிரும் பகுதியாக இம்மலைத் தொடர் விளங்குகின்றது. மேலும் விலங்குகலும் இயற்கையினை பார்த்து மிரலுகின்றது என்பதை.

**"அலர் எழச் சென்றன ராயினும் -மலர்**
**மாமடல் அவிழ்ந்த தாற்தளம் -சாரல்**
**இனம் சால் வயக்களிறு பாந்தட் பட்டெனத்**
**துஞ்சாத் துயரத்து அஞ்சுபிடிப் பூசல்**
**நெடுவரை விடரத்து இயம்பும்**
**கடுமான் புல்லிய காடிறந் தோரே"1**

**(நற்றினை ப.15 நூ.பா.14)**

என்ற பாடலின் மூலமாக தினைப்புனம் காக்கும் அழகிய மகளிர் ஓயாமல் ஆரவாரிக்கும் தோறும் கிளிகள் தம் இனம் என எண்ணி பலகாலும் அழைப்பதற்கு இடமாய் அமைந்தது. குறவர் அணில்கள் பெரிய கிளையையும், சிறந்த காய்களை உடைய பலா மரத்தின் இனிய கனியான பயனை கொள்வதற்கு அமைந்த குடிசையின் கூரை மரையுமாறு வேங்கை மலர்கள்

உதிர்ந்து பரவியுள்ளது அத்தோற்றத்தை கண்டு புலி என எண்ணி அஞ்சி புள்ளிகளை உடைய யானை மேகங்கள் தங்கும் மலைச் சாரலில் மூங்கில்கள் முரிந்து விழும்படி மலைகள் எங்கும் ஓடுகின்றது என்று கூறப்படுகின்றது.

காந்தள் மலர்கள் தலைகவிழ்ந்து பெரிய இதழ்களை விரித்திருக்கும் மலைச்சாரல் ஆங்கு துதிக்கையையுடைய ஆண் யானை மலைப் பாம்பின் வாயில் சிக்கி பிளிறும் பேரொளி மலையின் பிளவுகளில் சென்று எதிரொலிக்கின்றது. மேலும் இதனை.

**"உடங்கு நீர் வேட்ட உடம்பு உயங்கு யானை**
**கடுந் தாம் பதிபு ஆங்குக் கை தெறப்பட்டு**
**வெறி நிரை வேறாகச் சார்ச்சாரால் ஓடி**
**நெறி மயக்குற்றிநிரம்பா நீடு அத்தம்"2**

**(கலித்தொகை ப.90 நூ.பா.12)**

என்ற வரிகளின் மூலமாக இலை குவியல் மிகுதியாக குவிந்து கிடக்கும் வழியில் நீர் இல்லாத கடுஞ்சுனையைச் சூழ்ந்து நீர் உண்பதை விரும்பிய யானைகள் ஒன்றாய் கூடி அவ்விடத்தில் கைகளை இட்டன அக்கைகள் சுனையின் வெண்மையால் சுடப்பட்டன. அதனால் வருந்திய யானை கூட்டம் மலைசாரல் எங்கும் எல்லா இடங்களிலும் ஓடின இதனால் பழைய வழிகள் எல்லாம் அழிந்து தொலைந்தது போல மலை காட்சியளித்தது என்று கூறப்படுகின்றது.

**வளமான காட்டுப் பகுதி:**

பருவகாலம் மாறுவது போலவே காடுகளும் தங்களுடைய நிலையினை மாற்றிக் கொண்டு இருக்கின்றன. முல்லைக் கொடிகளிலே கூர்மையான முனையை உடைய அரும்புகள் தோன்றவும் தோன்றா மரத்தின் அரும்புகளுடன் கொன்றை மரத்தின் அரும்புகள் மெல்லிய கட்டவிழ்ந்து விரியவும், இருப்பை முறுக்கி விட்டாய் போன்ற கரிய பெரிய கொம்பையுடைய ஆண் மான்கள் பரல் கற்களையுடைய பள்ளங்களில் எல்லாம் நீர் அருந்திய மகிழ்ச்சியால் துள்ளிக் குதிக்கவும் அகன்ற இவ்வுலகம் நீர் இன்மையால் வருத்தம் நீங்க மின்னல்,அடித்து மலை பெற செய்தன இத்தகைய பகுதி வளமான காட்டு பகுதி இதனை.

**"இரவுப் புறத்தன்னபிண்பாடு தடவு முதல்**
**கறவுக் கோட்டன்ன முள்ளிலைத் தாழை**
**பெருங்களிற்று பருப்பினன்ன அரும்பு முதிர்பு**
**நன்மான் உழையின் வேறுபடத் தோன்றி**
**விழவுக்களம் கமழும் உரவு நீர்ச் சேர்ப்ப"3**

**(நற்றினை ப.20நூ.பா.19)**

என்ற வரிகளின் மூலமாக இறால் மீனின் முதுகைப் போன்று சுரசுரப்பும் பெரிய அடியையும் உடையது சுறாமீன். அதன் முகத்தில் நீண்டுள்ள கொம்பை போல முட்களையுடைய இலைகளை உடையது தாழை. அத்தாழையில் ஆண்யானையின் தந்தம் போல் தாழைபொட்டுகள். உள்ளன பென்மான் தலைசாய்ந்து நிற்றல் போல் தோன்றும் தாழை மொட்டுக்கள் விழா எடுக்கும் இடமெல்லாம் மனம் பரப்பி அளகாக காட்சி அளிக்கின்றது. இதனை

**"கிடங்கில அன்ன விட்டுக்கரைக் கான்யாற்றுத்**
**கலங்கும் பாசி நீர் அலைக் கலாவ**
**ஒளிறு வெள் அருவி ஒண்துறை மடுத்துப்**
**புலயொரு பொருத புண் கூர் யானை"4**
**(நற்றினை ப.65நூ.பா.65)**

என்ற வரிகளின் மூலமாக உயர்ந்த கரைகளை உடையதுமான காட்டாற்றில் கலங்கும் பாசியை நீர் அலைத்தது. அதனால் அது எங்கும் பரவியது. காட்டாற்றிலிருந்து வெள்ளிய அருவி விழுகிறது அருவி விழும் துறையில் யானை புலியுடன் சண்டை யிடுகிறது. அதனால் புண்பட்ட அந்த தந்தத்தை வேடன் விரும்பினான். அவன் தன்னுடைய வில்லில் இருந்து அம்பு எய்தினான் அந்த அம்பால் யானை சுழன்று அச்சம் தரும் விதத்தில் அங்கு உள்ள மலர் செடி இவைகளைக் கடந்து பேரொளி எழுப்பிக் கொண்டே வளமான காட்டுப்பகுதியில் பிளிரிய ஒலி கடெங்கும் ஒலித்தது இத்தகைய வளமான காட்டுபகுதியை உடையது இந்நிலம் என்று கூறப்படுகின்றது.

**மனதை மயக்கும் மலர்கள்**

பொதுவாகவே மலர்கள் என்றால் அனைவருக்கும் பிடிக்கும் என்று கூறலாம் அதிலும் இயற்கை எழில் மிளிரும் வளமான காட்டுபகுதியில் மலை, நீர் அருவி, விலங்குகள் இவ்வாறு இருக்கும் இச்சூழலில். மலர் தன்னுடைய அழகிய சிரிப்பினை வெளிக்காட்டுவது போல அழகுடன் மலர்ந்து காணப்பட்டால் யார்க்கு தான் பிடிக்காமல் போகும். வீல் வீரர் அம்புக் கூடு நிறைய இட்டு சொல்லும் தொழிலால் சிறப்புப் பெற்ற கூர்மையும் குப்பியும் உடைய அம்புகளின் நுனியைப் போன்று இருப்பை மொட்டுகள் மலர்ந்தன.

இருப்பையின் ஒருங்கே அரும்பியுள்ள செப்புத் தகட்டை போன்று சிவந்த தளிர் களிடந்தோறும் நெய் போன்ற இனிய துளையையுடைய பூக்கள் விளங்கின. மேலும் வானத்தில் இருந்து விழும் பனிக்கட்டிகள் போல் காற்றில் சிதறுண்டு பவளம் போன்ற சிவந்த மேட்டு வழிகளில் குருதி போல அழகிய காந்தள் பூ பூத்து இருந்தது இதனை.

**"கார்த்திகை தீபமெனக்**
**காடெல்லாம் பூத்திருக்கும்"5**
**(தே மழை ப.15)**

என்ற பாடல் வரிகளின் மூலமாக அகநானூற்றில் இயற்கையில் பூக்கும் மலர்கள், மனதைக் கவர்வதாக போற்றப்பட்டுள்ளன. மழையைப் பெறும் குளிர்ந்த நிலத்தில் உள்ள கார்காலத்தில் முன்னாள் பெய்த மழைக்கு அரும்பு ஈன்று முன்னம் உலர்ந்த இடத்தில் தழைத்த முள்னை வெளிப்பக்கத்தில் வளைந்து துடுப்பை போன்று மலர்ந்த இதழையுடைய செங்காந்தள் மலர்கள் மற்றும் நீல மணியை போன்ற மாநிறம் உடைய காயம் மலர்கள் மலர்ந்திருந்தன. மேலும் மலர்களில் இருந்து வரும் நறுமணம் வண்டுகளை கவரும் வண்ணம் ஈக்கப்பட்டு. அவை ஒளி எழுப்புகின்றன. தீயை போன்ற வேங்கையின் மலர்க் கொத்தை ஒக்கும். இவ்வாறு காட்டில் அழகாய் பூக்கள் மலர்ந்து மனதை கவரும் வண்ணம் இருந்தன.

**விலங்குகளின் செயல்**

இயற்கை எழில் மிளிரும் பாக்கம் என்று அழைக்கப்படுகின்ற காட்டில். அங்கு உள்ள

பறவை இனங்கள், பூந்தோட்டங், மட்டுமே தன்னுடைய மகழ்ச்சியினை வெளிப்படுத்தவில்லை. அக்காட்டினையே தன்னுடைய இருப்பிடமாக கொண்டு இருக்கின்ற விலங்குகளும் தன்னுடைய பங்கிற்கு தங்களுடைய மகிழ்ச்சியினை வெளிகாட்டுகின்றது.

தீயைப்போன்ற தாமரைப் பூக்களையுடைய வயலில் அழகிய உள்துளைகளைக் கொண்டு வள்ளையின் மெல்லிய கொடிகளை உழக்கி வாளை மீன்களைத் தின்ற கூரிய பற்களையுடைய நீர் நாய் முட்கள் பொருந்திய தண்டை உடைய பிரம்பின் பழைய புதர்களில் தங்கியிருக்கும் இதனை.

**"பொய்கைப் பள்ளிப் புலவு நாறு நீர்நாய்**
**வாளை நாளிரை பெறூஉம் ஊரே"6**

**(ஐங்குநுறூறு ப.86 நூ.பா.63)**

என்ற பாடலின் மூலமாக பெருமானே பொய்கையாகிய இடத்தில் வாழ்கின்றதும், புலவு நாற்றத்தைக் கொண்டதுமான நீர் நாயானது வாளை மீனைத் தன் அன்றைய இரையாகப் பெற்று கொண்டு வாழ்கின்றன. என்று கூறப்படுகின்றது.

**வறண்ட காட்டுப் பகுதி:**

பொதுவாகவே காடுகள் என்று எடுத்துக் கொண்டால் இயற்கை எழில் கண்ணைக் கவரும் வண்ணம் இருக்கும். மேலும் பல்வேறான விலங்குகள், பலவிதமான மலர்கள், அழகிய மலை தொடர் காணப்படும். சூழ்நிலைக்கு ஏற்றார் போல மனிதன் தன்னுடைய மனதை மாற்றிக் கொள்வது போல காடுகள் தங்களுடைய இயல்பினை மாற்றிக் கொள்கின்றன. இக்காட்டு பகுதி வறண்ட நிலமாக மாற்றிக் கொள்கிறது. இதனை

**"கடுகுபு கதிர் முட்டிக் காய்சினம் தெறுதலின்**
**உறல் உறு கமழ் கடாத்து ஏங்கிய எழில் வேழம்**
**வறன் உழு நாஞ்சில் போல் மருப்ப ஊன்றி நிலம் சேர**
**விறல் மலை வெம்பிய போக்கு அருவெஞ் சுரம்"7**

**(கலித்தொகை.ப.68.நூ.பா.8)**

என்ற பாடலின் மூலமாக நிலம் பிளக்குமாறு தீயைப் போன்று ஞாயிற்றின் கதிர் பசுமை நீங்கிடக் காய்தலால், நிழல் சுருங்க வற்றிப்போன மரங்களையுடையது பாறைகள் கொதித்து நீர் இல்லாத பசிய சுனைகளிலும் ஈரம் இல்லாத வண்ணம் காய்தலால் உலர்ந்து அங்குச் சொரியும் மூங்கில் நெற்கள் பொரிதற்குக் காரணமான வெப்பத்தை உடையது.

தன்பால் செல்பவர் எவரும் மில்லாததால் வழிப்பறி செய்பவரும் தம் தொழிலைத் துறந்து சோம்பியிருத்தலால் சுரம் பொலிவில்லாத நெறியையுடையது. மேலும் கதிரவன் விரைந்து காயும் கதிர்களைச் சினத்தால் சுடுவதால் வறட்சி உண்டாக்கியது. அதனால் முன்னம் வண்டுகள் மொய்க்கும் இயல்புடைய மதத்தை உடையதாய் விளங்கித் தற்போது கெட்ட அழகையுடைய யானகைள் அவை ஈரமற்ற நிலத்தை உழும் கலப்பைகள் போன்று கொம்புகளை ஊன்றிக் கையை நிமிர்த்து நிலத்தில் கிடக்கும் வெற்றியை உடையது இவ்வறண்ட காட்டு பகுதி என்று அழைக்கப்படுகின்றது.

**முடிவுரை**

அன்று முதல் இன்று வரையிலும் இயற்கை என்பது அனைவருக்கும் பிடித்தமான

ஒன்றாகவே இருந்து வருகின்றது. இன்றைய காதலா்களுக்கும், சரி அன்று இருந்த காதலா்களுக்கும் சரி, இயற்கை அவா்களின் அன்பினை வெளிகாட்டுகிறது. அன்றைய காலகட்டத்தில் தலைவன் தலைவியின் அழகினை இயற்கையில் இருக்கும் பூ, பறவை, விலங்கு, போன்றவற்றை வைத்து வா்ணிப்பதும். அதுபோலவே தலைவனுடைய நாட்டினை தலைவி, மலை, சூரியன், இன்னும், பலவற்றை வைத்து ஒப்புமைபடுத்தி இயற்கையோடு இணைக்கின்றனா் மனிதன் தன் துன்பங்களை எல்லாம் மறத்து இன்பவானில் சிறகடித்து பறப்பதற்கு வழிக்காட்டியாக அமைவது இயற்கை ஆகும். சங்ககால மக்கள் ஐந்திணையின் அடிப்படையில் இயற்கைகையப் போற்றினா். அகநானூற்றில் இயற்கை சிறப்பாக போற்றப்பட்டுள்ளது. இயற்கையைப் மறவாமல் பாதுகாப்போம், வளப்படுத்துவோம், போற்றுவோம்.

சான்றெண் விளக்கம்:


1. கௌமாரீசுஸ்வரி நற்றிணைப.15
2. பட்டத்திமைந்தன் கலித்தொகை ப.90
3. கௌமாரீசுஸ்வரி நற்றிணை ப.20
4. கௌமாரீசுஸ்வரி நற்றிணை ப.65
5. கௌமாரீசுஸ்வரி தேன் மலை ப.15
6. புலியூர்கேசிகன் ஐங்குநூறு ப.86
7. பட்டத்திமைந்தன் கலித்தொகை ப.68


*ஆய்வாளர் தனது அகநானூற்றில் இயற்கை காட்சி என்ற தலைப்பில் கட்டுரை வழங்கியுள்ளது மகிழ்ச்சிக்குரியது. ஆய்வாளர் தனது கருத்திற்கு சங்க இலக்கியங்களின் பாடல் வரிகளை ஆய்வுக்குட்படுத்தியுள்ளது சிறப்பிற்குரியது. ஆனால்இ ஆய்வாளர் தனது ஆய்வுக்கருத்தினை ஒவ்வொரு பாடல் கருத்திற்குபின் கூற இயலாதது கட்டுரையின் சிறப்பிற்குப் பின்னடைவாகவும் கட்டுரை ஆய்வு நோக்கமின்றியும் அமைவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது எனலாம். மேலும்இ எழுத்துப்பிழைகளும் சந்திப்பிழைகளும் ஆங்காங்கே விரவி காணப்படுகின்றன. அவற்றை சரி செய்து கட்டுரையைச் செம்மைப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.*